Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 65 கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன்; கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டு கெஞ்சுகிறேன் சங்.142:1 மார்ச் 2019 No. 3

## வெதுவெதுப்பான நிலை குறித்த ஒரு உறுதியான எச்சரிப்பு

***An earnest warning about lukewarmness***

Charles H. Spurgeon

வேதபகுதி : வெளி.3:14-21

### ஒரு சபை தான் பெற்றிருக்கும் கீர்த்தியை விட மிகத் தாழ்வான நிலைக்கு விழுந்து விடலாம்

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேனென்று இந்த எச்சரிப்பு ஆரம்பிக்கிறது. இதன் கருத்து, "பிறர் உன்னைக் குறித்து சரியாக அறியவில்லை. மக்கள் உன்னைக் குறித்து உனது தகுதிக்கு மிஞ்சி எண்ணுகிறார்கள். உன்னைக் குறித்தே உனக்குத் தெரியவில்லை. உனது கிரியைகள் மேலானது என்று நீ எண்ணுகிறாய், ஆனால் அவை வித்தியாசமானவை என நான் அறிவேன்". தமது சபையின் கிரியைகளை தேவன் ஆராய்ந்து பார்க்கிறார். அவர் தமது சபையை அதின் புறச் செயல்களையல்ல, அதின் உள்ளான பரிசுத்தத்தை கவனிக்கிறார். அவர் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறார். அவர் எல்லாவற்றையும் பரிசோதித்து அக்கினிக்கு இரையாகாத தங்கத்தை மதிக்கிறவர். அவரது கருத்தும் நமது கருத்தும் ஒன்றாயிருக்க வேண்டும். மனிதர் கடந்த கால அனுபவங்களில் பெருமைப்பட்டுக்கொண்டு இன்றைய மரித்த நிலையை உணராதிருக்கின்றனர்.

### இங்கு விவரிக்கப்படும் நிலை நிர்விசாரமும் சிரத்தையின்மையுமாகும்

அவர்கள் குளிராயிருக்கவில்லை, அதே வேளையில் அனலாகவுமிருக்கவில்லை. அவர்கள் அவபக்தர்களல்ல, ஆயினும் உத்தம விசுவாசிகளுமல்ல. அவர்கள் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்கவில்லை, எனினும் அதைப் பாதுகாக்கவில்லை. அவர்கள் தீமை செய்யவில்லை, நன்மை செய்யவு மில்லை. சன்மார்க்க நெறியில் அவர்கள் புகழற்றவர்களல்ல, ஆயினும் தூய்மையில் உயர்ந்தவர்களுமல்ல. அவர்கள் மதப்பற்றற்றவர்களல்ல, ஆனால் உத்வேகத்துடன் பரிசுத்தமாக வாழவில்லை.

அவர்களில் நல்ல காரியங்கள் காணப்பட்டன. ஆனால் அவை நன்கு பராமரிக்கப்படவில்லை. ஜெபக் கூடுகைகள் இருந்த போதிலும் அதை பயன்படுத்தினவர்கள் ஒரு சிலரே.

சில சபைகள் கல்விக்கூடங்களையும், வேதபாடசாலைகளையும் நடத்தியும் அவைகளால் எந்த நன்மையும் ஏற்படுவதில்லை. ஏனெனில் அவை அரைமனதோடும், அரை உயிரோடும் நடத்தப்படுகின்றன.

சரியான காரியத்தையே செய்த போதும் அதனை முழு மனத் தோடும், முழு பலத்தோடும் முழு ஆத்துமாவோடும் செய்யவில்லை. அவர்கள் தங்கள் செயல்களையும் ஜெபக்கூடுகைகளையும் விட்டுவிடும் அளவுக்குக் குளிராயிருக்கவில்லை. சுவிசேஷத்தை அசட்டை செய்யவு மில்லை. அப்படியானால் அவர்களை உணர்த்தி மனந்திரும்புதலுக்கு வழி நடத்தியிருக்கலாம். ஆனால் அவர்கள் சத்தியத்திற்காகவும் மனந்திரும்புவதற்காகவும், பரிசுத்த வாழ்விற்காகவும் அனலுள்ளவர்களாகவும் பாவத்தைச் சுட்டெரிக்கும் வெப்பமுடையவர்களாகவும், சாத்தானை கோபப்படுத்த உற்சாக முடையவர்களாகவும், தேவனுடைய பலிபீடத்திற்கு முன்பாக தங்களை ஜீவனுள்ள பலியாகவும் ஒப்படைக்கக் கூடியவர்களாகவும் இருக்க முடியவில்லை. அவர்கள் குளிராகவோ அனலாகவோ இருக்கவில்லை.

இத்தகைய நிலையில் லவோதிக்கேயா சபை தன்னைக் குறித்து "நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும்" சொல்லுகிறது. சபை அங்கத்தினர்களும் எல்லாம் நன்றாகவேயிருக்கிறது என மார்தட்டுகிறார்கள். இந்த நிலைமை நம்பிக்கை யற்றது.

இந்நிலையிலிருந்து மக்களைத் திருப்புவது கடினமானது. குளிர் நம்மை நடுங்கச் செய்யும். வெப்பம் நம்மை வேதனைப்படுத்தும். எனவே இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை சொகுசானது. மனித இயற்கைக்கு இது பொருத்தமானது. உலகம் இத்தகைய சபையோடு சமாதானமாயிருக்கிறது, சபையும் சந்தோஷமாயிருக்கிறது. உலகத்தோடு ஒத்துப் போவதற்கு ஒரு எல்லையுண்டு. சில விருப்பங்களை சபை விட வேண்டும். நிர்விசாரம் சபைகளை விழச் செய்கிறது. லௌகீக பேச்சாளர்கள் மக்களை இரையாக்குகிறார்கள். மக்கள் பாவ இன்பங்களையும் பரிசுத்த வாழ்வின் கனத்தையும் ஒரே வேளையில் அனுபவிக்க விரும்புகிறார்கள். இப்போது அதிக உழைப்பு தேவைப்படுவதில்லை, அதிகமாகக் கொடுக்கவும் ஜெபிக்கவும் தேவையில்லை. வாழ்வு எளிதாகிவிடுகிறது. ஆனால் பாவம் இடம் பெறும் போது உண்மையான தேவபயம் இருப்பதில்லை.

### இந்த நிர்விசாரம் சுயதிருப்தியை ஏற்படுத்துகிறது

புலம்பவேண்டிய மக்கள் களிகூருகிறார்கள். துயரத்தின் அடையாளத்தைக் காண்பிக்க வேண்டியவர்கள் வெற்றிக் கொடியைக் காண்பிக்கிறார்கள். "நாங்கள் ஐசுவரிய சம்பன்னர், எங்களுக்கு அனேகப் பள்ளிகளிருக்கின்றன, நாங்கள் எல்லாவகையிலும் வளர்ந்து வருகிறோம். எங்களுக்குக் குறைவேயில்லை....." என்கிறோம். ஆனால் ஆவிக்குரிய தேவைகள் அனேகம் என்பதை மறந்துவிடுகிறோம். "நான் பின்மாறிவிட்டேன், நான் குறைவுள்ளவன், இன்னும் நான் கிறிஸ்துவுக்காக அதிகமாகச் செய்யவேண்டும், கிறிஸ்துவுக்காக எரிந்து பிரகாசிக்க வேண்டும்" என்று புலம்புகிற சபையை தேவன் ஆசீர்வதிப்பார். ஆனால் தன்னைக் குறித்து பெருமைப்படுகிற சபையின் நிலை பயங்கரமானது. தான் ஐசுவரிய சம்பன்னனென்று எண்ணும் சபையின் நிலை தேவ பார்வையில் வெறுமையானது. தனி ஜெபத்தில் குறைவு சபையின் பெலவீனம். கிறிஸ்துவோடுள்ள ஐக்கியம் குறைவுபடும்போது மார்க்கத்தின் உயிர் இழந்துபோகிறது. ஆயினும் வெளித்தோற்றத்தில் ஆசீர்வாதமானதாகத் தோற்றமளிக்கிறது.

### இந்த லவோதிக்கேயா சபை கர்த்தரைத் துரத்திவிட்டது

'இதோ நான் வாசற்படியில் நின்று தட்டுகிறேன்' என்று இந்த பகுதி நமக்குக் கூறுகிறது. உண்மையாகவே செழித்து வளரும் ஒரு சபையில் கர்த்தர் வெளியே நிற்கமாட்டார். அவர் நம்

(3-ம் பக்கம் பார்க்க)

**மார்ச் மாத உபவாச ஜெபம்**

Heart cry for Holy Spirit Revival

**எழுப்புதலுக்காக இதய கதறல் 2019**

**(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)**

காலம் : ***16.03.2019***
3-வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை

இடம் : **பெதஸ்தா மறுரூபத் திருச்சபை**
*79/2, சட்ராஸ் மெயின்ரோடு*
வெங்கப்பாக்கம், Via கல்பாக்கம்
காஞ்சீபுரம் மாவட்டம்

தொடர்பு : **பாஸ்டர் N.M. ஜெய்சிங்**
மொபைல் : 9994245426

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : **வருகையின் தூதன்,** நியூபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
**VARUKAYIN THOOTHAN,** Newport Street, Nagercoil-629 001.
**Mobile:** 95432 21008, **mail:**Varukayinthoothan@hotmail.com
**வங்கி கணக்கு : VARUKAYIN THOOTHAN,** A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006


## இம்மாத பொன்னான சிந்தனை

மனித வாழ்வின் உன்னத நோக்கம் பொருள் ஈட்டி வாழ்வது அல்ல, தன்னையே இரட்சிப்பின் திருப்பணிக்கு அர்ப்பணித்து, தனக்குரியதை யெல்லாம் தன் ஆண்டவருக்கே வழங்கிவிடுவது. – டேவிட் லிவிங்ஸ்டன்

## வாக்குத்தத்தம்

இந்த நியாயங்களை நீங்கள் கேட்டு, கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால்,..... உன்மேல் அன்பு வைத்து, உன்னை ஆசீர்வதித்து,.... உன்னைப் பெருகப்பண்ணி,...... ஆசீர்வதிப்பார்.
சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்;.....
கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்;

உபாகமம் 7:12-15

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,**

**நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.**

டேவிட் லிவிங்ஸ்டன் சரீரம் அரச மரியாதையோடு அடக்கம் பண்ண வைக்கப்பட்டிருந்தபோது, அதன் அருகில் ஒருவர் கண்ணீரோடு காணப்பட்டார். நீங்கள் டேவிட் லிவிங்ஸ்டன் உறவினரா என்று கேட்டபோது அந்த மனிதன் இவ்வாறு கூறினார் :"நானும் டேவிட் லிவிங்ஸ்டனும் ஒன்றாக இருந்தோம். டேவிட் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்ய ஆப்ரிக்கா சென்று, இன்றைக்கு அரச மரியாதையோடு அடக்கம் பண்ணப்படுகிறார்; நானோ ஒரு குடிகாரனுடைய கல்லறையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அருமையான கர்த்தருடைய பிள்ளையே, வாழ்க்கையின் நோக்கம் பொருள் ஈட்டி வாழ்வது அல்ல, ஆண்டவருக்கு நம்மை அர்ப்பணிப்பதும், ஏதாவது ஒருவிதத்தில் ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்வதுமே!

மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மத்தேயு 9:25.

முதலாவது வாசகர் சிலரின் கடிதங்களை கீழே அச்சிடுகிறேன்:

*Dear Bro. in Christ,*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். பல வருடங்களாக நான் மிகவும் விரும்பி படிக்கும் பத்திரிகை வருகையின் தூதன். பத்திரிகை கிடைக்கப் பெற்றதும் வாக்குத்தத்த வசனத்தைப் படிப்பேன். ஆழமான சத்தியங்கள் உள்ள இப்பத்திரிகை ஆவிக்குரிய வாழ்வுக்கு மிகவும் பிரயோஜனம். தங்கள் ஊழியத்திற்காக ஜெபிப்பேன். எனக்காக, கணவர் மற்றும் 4 பிள்ளைகள் குடும்பங்கள், பேரப் பிள்ளைகள் படிப்பு, எதிர்காலம், Sply.- இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

தேவாதி தேவன் உங்களையும், ஊழியத்தையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. இத்துடன் ஒரு சிறு தொகை (ரூ.500) ஊழியத்திற்காக அனுப்பியுள்ளேன், பெற்றுக் கொள்ளுங்கள்.

அன்பின் தோத்திரம், நன்றி. TC 010385 Mrs. R.J., நாசரேத்

*****

| **உபவாச ஜெபம்** | **முன்னேற்றப்பணி** |
|---|---|
| WESLEY DEVADASON | WESLEY DEVADASON |
| A/c. No.: 370601000002557 | A/c. No.: 61822200136904 |
| I.O.B., Court Road, | Syndicate Bank, W.C.C. Road, |
| Nagercoil-1 | Nagercoil-1 |
| IFSC Code : IOBA0000063 | IFSC Code : SYNB0006182 |

கர்த்தருக்குள் அன்பான பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு ஸ்தோத்திரம் செய்து எழுதி கொள்வது

தங்களுக்கு கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள். 2019 ஆண்டுக்கு பத்திரிகை சந்தா ரூ.100/- M.O. மூலம் அனுப்பி உள்ளேன். தொடர்ந்து பத்திரிகை அனுப்பவும்.

இங்ஙனம்
TR 00570, Mr. M.D., திருச்சி

*****

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள வருகையின் தூதன் ஆசிரியருக்கு,

தங்கள் கணக்குக்கு, Online-ல் என் மகன் மூலமாக ரூ.1000/- எனக்காக MD 00661Y அனுப்பியுள்ளேன். தயவுசெய்து பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளு கிறேன். தூதன் பத்திரிகை எங்கள் வீட்டுக்கு ஆரம்பத்தில் வேறு முகவரிக்கும், தற்போதுள்ள முகவரிக்கும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஒரு முறை தங்கள் தகப்பனார் Rev. S. **தேவதாசன்** அவர்கள் மதுரைக்குப் பக்கத்தில் உள்ள மேலூருக்கு வந்திருந்தார். ஒரு ஏழை ஊழியர் கன்வென்ஷன் வைத்திருந்தார். அதில் செய்தி கொடுத்தார்கள். என் வீட்டுக்குப் பக்கத்தில் அந்த இடம் இருந்ததால் என் வீட்டில் வந்து ஜெபித்துவிட்டு போனார்கள். 1970 என்று நினைக்கிறேன்.

அதனால் **'தூதன்'** பத்திரிகை அதுமுதல் இந்நாள் வரைக்கும் எனக்குப் பிரயோஜனமாக இருந்து வருகிறது. தங்கள் ஊழியத்திற்காக ஜெபித்து வருகிறேன். எனக்காகவும் என் பின்னைகளின் குடும்பங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கிறிஸ்துவுக்குள் சகோதரி A.J.

*****

2018-ம் ஆண்டு செப்டம்பர் மாத வருகையின் தூதன் பத்திரிகையில், தூதன் அச்சிட்டு அனுப்ப மாதந்தோறும் ரூபாய் 75,000 தேவை, உபவாச ஜெபத்திற்கு மாதந்தோறும் ரூபாய் 25,000 தேவை என்று எழுதியிருந்தேன். **தேவ மகிமை, தேவனுடைய வீடு** வேலைகள் முடிக்கப்படவில்லை என்பதையும் விவரித்திருந்தேன்.

ஆனால் வாசகரில் அநேகர், சந்தா என்று எழுதியோ எழுதாமலோ டிசம்பர் மாதமும் ஜனவரி மாதமும் ரூ.100/- மாத்திரம் அனுப்பியிருக்கிறீர்கள். தபால் சலுகை இல்லாத படியால் 2018-ம் ஆண்டு முழுவதும் பத்திரிகை ஒவ்வொன்றுக் கும் ரூபாய் 2.00 வீதம் தபால் தலை ஒட்டி அனுப்பியதை வாசகர்கள் அறிவீர்கள்.

ஜனவரி மாத பத்திரிகை தயாராகியும், தபால் தலைகள் இங்கே கிடைக்காத காரணத்தால், சென்னையிலிருந்து வாங்கி சுமார் 3 வாரங்கள் தாமதமாக அனுப்ப வேண்டியதாயிற்று. இதைக் கேள்விப்பட்ட ஒரு வாசகர் ரூபாய் ஆயிரத்திற்கு தபால் தலைகள் வாங்கி பதிவு தபாலில் அனுப்பி வைத்திருந்தார்.

இம்மாதம் முதல் தூதன் 4.00 ரூபாய் தபால் தலை ஒட்டி நூல் அஞ்சல் (Book-Post) என்கிற நிலையில் அனுப்பு கிறோம். எனவே அடுத்த மாதம் முதல் அனைவருக்கும் பத்திரிகை அனுப்ப இயலாது என்பதை தெரிவிக்கிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெப்ரவரி இதழ் அச்சிடபடவில்லை.

### பத்திரிகை செய்தி

இரண்டு மாதங்களாக ஸ்டாம்ப் கிடைக்காத நிலை உண்டானதால் பத்திரிகை தயாராகியும் தபாலில் சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டதை கடந்த மாத ஜாமக்காரனில் அறிவித்தேன். உடனே பல்வேறு இடங்களிலிருந்து வாசகர்கள் 500, 200, 100, 1000 என்று 1 ரூபாய் ஸ்டாம்புகளை அனுப்பியிருந்தார்கள். சிறு துளி பெருவெள்ளம் என்பது போல் எனக்கு அனுப்பிய ஸ்டாம்புகள் தேவைக்கு அதிகமாகவே வந்து சேர்ந்தன. அனுப்பிய யாவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை கூறிக்கொள்ளுகிறேன். - நன்றி ஜாமக்காரன்

இந்த அருமையான பத்திரிகையை படித்தும், ஊழியத்திற்கு உதாரத்துவமாய் கொடுக்க அநேகருக்கு மனதில்லாமற் போயிற்று. இந்த இக்கட்டான சூழ்நிலையில் அடுத்த மாதம் முதல் உதாரத்துவமாய் உதவி செய்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு மாத்திரம் தூதன் நூல் அஞ்சல் (Book-Post) வழியாக அனுப்பப்படும் என்று அறிவிக்கிறேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்க தொடர்ச்சி)

மோடு இருந்தால் தமது ஜனங்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவார். அவரது பிரசன்னம் நமது ஆராதனைகளை ஆவிக்குரியதாகவும் உயிரோட்ட முள்ள தாகவும் ஆக்கும். அவர் தமது ஊழியக் காரரை பந்தியில் சந்தித்து தமது சரீரத் தையும் இரத்தத்தையும் விருந்தாக அளிக்கிறார். நமது அனைத்து சபை செயல்களிலும் வல்லமையை அளித்து வேதவசனம் நம்மிலிருந்து வெளிப்பட உதவிசெய்கிறார். உத்தம பக்தர்கள் இயேசுவிலும், இயேசு அவர்களிலும் வாழ்வதைக் காணலாம். ஒரு சபையில் கிறிஸ்து இருக்கும்போது அது சந்தோஷ மும், தூய்மையும், வல்லமையும், வெற்றியுமுடையதாயிருக்கும். எனவே அவரைப் பார்த்து, "எங்களோடு தங்கி யிரும். சபையாகிய எங்களுக்கு நீரே ஜீவனும் மகிழ்ச்சியுமாயிருக்கிறீர். நீர் எங்களோடு இல்லாவிட்டால் எங்கள் மகிமை எடுபட்டுப் போகும். உமது பிரசன்னமின்மை எங்களுக்கு வெட்க மாயிருக்கும்" என்று சொல்லுவோம்.

## ஆபத்து

லவோதிக்கேயா சபையின் நிலை ஆபத்தானது. முதலாவது அது கிறிஸ்து வால் **புறக்கணிக்கப்படுகிறது.** "உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடு வேன்" என்ற துக்கமான நிலையைப் பார்க்கிறோம்.

மேலும் இத்தகைய சபை **நிர்பாக்கியமுள்ளது.** மகிழ்ச்சியற்றதும், பிரிவினையுள்ளதும் தேவபிரசன்ன மற்றதுமான ஒரு நிலை இங்கு காணப் படுகிறது. மேலும் உயிரற்றதும், ஆவி யற்றதும் வரட்சி நிறைந்ததும், கிருபை யற்றதும், தவறான போதனை நிறைந்தது மான நிலை இதில் காணப்படும்.

மட்டுமின்றி **பரிதபிக்கப்படத்தக்க** ஒரு நிலையில் அது காணப்படுகிறது. ஒருகாலத்தில் மகிமையுடன் விளங்கிய சபை இன்று வெட்கத்துடனிருக்கிறது. வாழ்த்தப்படுவதற்குப் பதிலாக பரி தாபப்பட வேண்டிய நிலையும் புகழப் படுவதற்குப் பதிலாக கடிந்து கொள்ளப் பட வேண்டியதும் ஏற்படுகிறது.

மேலும் **தரித்திரநிலையும்** காணப் படுகிறது. அங்கத்தினரின் குறைவு, ஜெபத்தாழ்ச்சி, வரங்கள் கிருபைகள் யாவற்றிலும் தாழ்ச்சி காணப்படும். ஏதோ சிலர் செழிப்புடன் காணப்படு வதாகத் தோன்றலாம். ஆனால் மொத்தத்தில் சபை வெறுமையாகவும், கிறிஸ்துவின் ஜீவனற்றதாகவும் காணப் படும். பீடத்திலிருந்து வரும் செய்தி பதராகவும் சபை லௌகீகம் நிறைந்த தாகவும், சபையார் மாலையின் கூட்ட மாகவும் காணப்படுவர்.

மட்டுமின்றி அவர்கள் **பார்வை யிழந்தவர்களாய்**ருப்பதால் பிறரைக் கண்டு கொள்ளமாட்டார்கள். நன்மை செய்ய முடியாதவர்களாகவும் கிறிஸ்து வின் வருகையைக் காணக் கூடாத வர்களாகவும் அவரது மகிமையை காண முடியாதவர்களுமாயிருப்பர்.

இறுதியாக அவர்கள் நிர்வாணி களாக்கப்படுகின்றனர். அவர்களை அனைவரும் வெட்கத்தோடு பார்க்க வேண்டியதாகும். மக்களின் வாயில் அவர்கள் பழமொழியாவார்கள். "இதுவா ஒரு சபை?" என்று சிலரும், "இதுவா இயேசு கிறிஸ்துவின் சபை?" என்று இன்னும் சிலரும் கேட்பார்கள்.

இந்நிலையில் சபை ஜெயம் கொள்ள முடியாது. ஜெயம் கொள்ளு பவர்களுக்கு சிங்காசனத்தில் இட முண்டு. கலாத்தியரைப் பார்த்து பவுல், "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே. சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடை செய்தவன் யார்? என்று கேட்கிறார் *கலா.5:7.* இந்த நிலையில் தேவன் அவர்களைத் தள்ளி விட்டு பிறரை பயன்படுத்துவார்.

## நிவாரணங்கள்

நீங்கள் நியாயந்தீர்க்கப்படாத படிக்கு உங்களை நீங்களே நிதானித்து அறியுங்கள் உங்களில் சிலர் வெது வெதுப்பான நிலையில் இருக்கிறீர்கள்.

சபையின் உண்மை நிலையைக் குறித்து இயேசு தெளிவாகக் கண்டு பிடிக்கிறார். "நீ வெதுவெதுப்பாயிருக் கிறாய்.... நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திர னும், குருடனும், நிர்வாணியுமாயிருக் கிறாய்". நாம் எப்படிப்பட்டவர்களா யிருக்கிறோம் என்பதை ஆண்டவர் நமக்கு வெளிப்படுத்தட்டும். நாம் இருக்கிற நிலையை விட்டு மனந்திரும்ப வேண்டும்.

அடுத்தபடியாக அவரது கிருபை யுள்ள ஆலோசனை : 'நீ ஐசுவரியவானா கும்படிக்கு நெருப்பிலே புடமிடப் பட்ட பொன்னை' வாங்கும் படியான ஆலோசனை இது. *ஏசா.55:1*-ம் வசனம் இதற்கு இணையாயிருக்கிறது. "..... நீங்கள் வந்து பணமுமின்றி விலையு மின்றி திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்" *ஏசா.55:1.*

ஆக வெதுவெதுப்பான நிலைக்கு நிவாரணம் நாம் முதலில் ஆரம்பித்தது போல மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும். நாம் நன்றாக உடுத்தியிருக்கிறோமென்று எண்ணினாலும் நாம் நிர்வாணிகள்தான். நாம் அவரிடம் திரும்பி, அவரது கிரயத்தால் நமக்கு வாங்கிக் கொடுக்கப் பட்ட அவரது சொந்த நீதியாலான, அவரது ஆவியாலான நன்மையான ஆடையையும் அழகாக நமக்கு உடுத்து விப்பார். நமது கண்களின் பார்வை குன்றிப் போனபடியால் தேவனுடைய முகத்தைப் பார்க்க முடியாமலும் அவரது மகிமையைக் கண்டுகொள்ள முடியா மலும், பாவிகளைக் கண்ணீரோடு பார்க்கக்கூடாமலும் இருப்பதால் ஒருமுறைகூட நமது கண்களைத் திறக்கும்படி கேட்போம். அவருடைய அன்பு குறையவில்லை. நாம் அவரை விட்டு அலைந்து சென்றாலும் அவரிடம் செல்லும்படி அழைக்கிறார். அவர் நமது தேவைகளை சந்திக்கிறவர்.

பின்வாங்கிப் போனவர்களுக் கான மிக நல்ல நிவாரணம் கிறிஸ்து வோடுள்ள அதிகப்படியான உறவாகும். 'இதோ நான் வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்'. இது மனந்திரும்பாத வர்களுக்கு கொடுக்கப்படும் அழைப்பு அல்ல. சபைக்கு வெளியே துரத்தப் பட்டுள்ளார். சபை இரக்கமின்றி அவரைத் துரத்தினாலும் அவர் வெகு தூரம் செல்லவில்லை. அவர் சபையை நேசிப்பதால் அதை முற்றும் விட்டுவிட மனமற்றவராக திரும்பி வரும்படி வாசலண்டை நிற்கிறார். சபை தன் பழைய நிலைக்கு வர அவர் திரும்பி வரவேண்டும். சபையை ஆசீர்வதிக்க விரும்பும் அவர் காத்துக்கொண்டே நிற்கிறார். கதவைத் தட்டிக்கொண்டு நிற்கிறார். பல பிரசங்கங்கள் மூலமாகவும், மனச்சாட்சியின் உறுத்தல்கள் மூலமாக வும், தூய ஆவியானவரின் ஏவுதலின் மூலமாகவும் தட்டிக்கொண்டு நிற்கிறார். பல்வேறு விதங்களில் சபையை விழிப் படையச் செய்யப் பேசுகிறார். சபையின் செயலால் அதை வாந்தி பண்ணிவிடு வேன் என்றவர், நம்மைவிட்டுப் போய் விடாமல் கிருபையினால் நம்மை நேசித்து நம் இருதயக் கதவைத் தட்டுகிறார்.

நம்மிடம் வந்து நம்மோடு போஜனம் பண்ணுவது அவரது விருப் பம். அவர் ஒரு நல்ல விருந்து தருவார். அவர் நம்மோடு போஜனம் பண்ணினால் நமது வெதுவெதுப்பான நிலை அகன்று போகும். இயேசுவோடு வாழுகிறவர் களின் இருதயங்கள் கொழுந்துவிட்டு எரியும். இயேசுவோடு வாழ்ந்து அவரிடம் கற்றுக் கொள்பவர்கள் இந்த ஆசீர்வா தத்தைப் பெறுவர். இயேசுவோடுள்ள உறவில் வளருங்கள்.

## ஒவ்வொருவரும் கிட்டிச் சேரவேண்டும்

இதுவே நான் இறுதியாகக் கூறும் வார்த்தை நாம் நம்மையே சோதித்து கிருபையில் குறைந்திருப்போமானால் நமது குறைகளை அறிக்கையிட வேண் டும். ஒவ்வொருவரும் தங்களுக்காக ஜெபிக்க வேண்டும். கதவைத் திறக்க வேண்டியது சபையல்ல. "ஒருவன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால்". தனி நபர்கள் சரிப்படும்போது சபை சரிப்படும். ஆண்டவருடைய அன்புக் கும் சேவைக்கும் நாம் திரும்பிச் செல்ல அவரது கடிந்து கொள்ளுதலை கவனிக்க வேண்டும். அவரது கரங்களைப் பிடித்துக் கொண்டு, 'என் ஆண்டவரே! என் தேவனே!' எனக் கதறவேண்டும். அவிசுவாசமுள்ள தோமா தன் விரல்களை ஆண்டவரின் ஆணிபாய்ந்த கரங்களிலும் தன் கையை அவரது குத்தப்பட்ட விலாவிலும் இட்ட பின்பு உறுதியான விசுவாசியாகிவிட்டான். ஆண்டவரோடு நெருங்கி வரும்போது அவர் நம்மை ஆசீர்வதிப்பார். எனவே அனுதினமும் அவரோடு நெருங்கிப் பழகுங்கள். அவரைவிட்டு தூரம் போகாதிருங்கள்.

**மக்கள் பாவ இன்பங்களையும் பரிசுத்த வாழ்வின் கனத்தையும் ஒரே வேளையில் அனுபவிக்க விரும்புகிறார்கள்.**

# கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமாயிருக்கிறார்

## *Christ is all*

J.C. Ryle (1816-1900)

"...... கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமாயிருக்கிறார்" கொலோ.3:11. இந்த வார்த்தைகள் கிறிஸ்தவத்தின் சாரமும் முக்கிய அம்சமுமாயிருக்கிறது. நமது இருதயங்கள் அவைகளோடு செல்ல முடியுமானால் நமது ஆத்துமாக்கள் நன்றாயிருக்கும். இல்லாவிட்டால் இன்னும் நாம் அதிகமாகக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

தத்துவத்தின்படியும், செயல்முறையின்படியும் கிறிஸ்தவத்திற்கு முக்கிய ஆதாரமாயிருப்பது கிறிஸ்துவே. சுத்திகரிக்கப்படுவதற்கும் நீதிமானாக்கப்படுவதற்கும் கிறிஸ்துவைப் பற்றிய சரியான அறிவு அவசியம். எப்படி 'கிறிஸ்து எல்லாரிலும் எல்லாம்' என்பதனை உங்கள் முன்பாக விளக்க விரும்புகிறேன்.

### தேவனுடைய ஆலோசனைகளில் கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமானவர்

ஒரு காலத்தில் பூமி வெறுமையாயிருந்தது. திடமான மலைகளும், எல்லையில்லா சமுத்திரங்களும், வானத்து நட்சத்திரங்களும் இருக்கவில்லை. மனிதனும் அறியப்படவில்லை.

### அப்போது கிறிஸ்து எங்கேயிருந்தார்?

அப்போதும் கிறிஸ்து 'தேவனோடிருந்தார்.' அவர் 'தேவனாயிருந்தார்' 'அவர் தேவனுக்குச் சமமாயிருந்தார்' (யோவா.1:1; பிலி.2:6) அப்போதும் பிதாவின் நேசகுமாரனாயிருந்தார். அவர் யோவா 17:24-ல் 'பிதாவே உலகத் தோற்றத்துக்கு முன்னே நீர் என்னில் அன்பாயிருந்தபடியால்.....' என்று கூறுகிறார். உலகம் தோன்றுவதற்கு முன்பாகவே அவர் பிதாவின் மகிமையைப் பெற்றிருந்தார் யோவா.17:5. அப்போதே அவர் இரட்சகராகவுமிருந்தார். 'அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்தார்' 1 பேதுரு.1:20 'உலக தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்' எபேசி.1:4.

காலப்போக்கில் பூமி இப்போது இருக்கிறது போல சிருஷ்டிக்கப்பட்டது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், சமுத்திரம், வெட்டாந்தரை அவற்றிலுள்ள ஜீவ ராசிகள் அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டன. இறுதியாக பூமியின் தூளினால் மனிதன் உருவாக்கப்பட்டான்.

யோவா.1:3-ன் படி "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை". "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது" கொலோ.1:16. "கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர் : வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது" எபி.1:10 அவர் தமது பிரசங்கங்களில் ஆடுகள், மீன், பறவைகள், தானியங்கள், லீலிப் புஷ்பங்கள் ஆகியவற்றைக் குறித்துப் பேசினார். இவையெல்லாம் அவரால் சிருஷ்டிக்கப்பட்டவை.

பின்பு ஒருநாள் பாவம் உலகில் பிரவேசித்தது. ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியைப் புசித்து விழுந்துவிட்டனர். அவர்கள் உருவாக்கப்பட்ட தூய்மையான முதல் தன்மையை இழந்தனர். தேவனுடைய நட்பையும் ஆதரவையும் இழந்து குற்றவாளிகளானார்கள். இப்போது உதவியற்றதும், நம்பிக்கை இழந்ததுமான பாவிகளாகிவிட்டனர். பாவம் அவர்களது தூய தந்தைக்கும் அவர்களுக்குமிடையில் தடுப்புச் சுவரை ஏற்படுத்தியது. சரியாகத் தண்டிக்கப்பட்டால் மரணமும், நரகமும், நித்திய அழிவும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

### அப்போது கிறிஸ்து எங்கிருந்தார்?

அதே நாளில் நம்பிக்கையின் ஒரே இரட்சகராக அந்த நடுங்கிய பெற்றோருக்குத் தம்மை வெளிப்படுத்தினார். பெண்ணின் வித்து சாத்தானின் தலையை நசுக்கும் என அறிவிக்கப்பட்டது. பெண்ணின் மூலம் பிறக்கும் ஒரு இரட்சகர் பிசாசை வென்று நித்திய ஜீவனுக்கான வழி திறக்கப்படும் என கூறப்பட்டது. (ஆதி.3:15) கிறிஸ்து உலகின் உண்மையான ஒளியாக உயர்த்தப்பட்டார். வீழ்ச்சியின் நாளிலேயே மீட்பும் அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து கிறிஸ்துவேயன்றி இரட்சிப்புக்கான எந்த நாமமும் அறியப்படவில்லை. எனவே இரட்சிப்படைந்த ஆத்துமாக்கள் மட்டுமே பரலோகத்தில் பிரவேசிக்கக்கூடும். அவராலேயன்றி எவரும் நரகத்துக்குத் தப்ப முடியாது.

சில காலத்துக்குப் பின்பு உலகம் தேவனை மறந்துவிட்ட ஒரு காலம் வந்தது. நாலாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு பூமியின் தேசங்கள் தேவனை முற்றிலும் மறந்துவிட்டனர். எகிப்திய, அசீரிய, பெர்ஸிய, கிரேக்க மற்றும் ரோம ராஜ்யங்கள் விக்கிரகாராதனையையும், மூடநம்பிக்கைகளையும் பரப்பினர். கவிஞர்களும் சரித்திர ஆசிரியர்களும், தத்துவமேதைகளும் தங்கள் ஞானத்தால் தேவனைப் பற்றிய சரியான அறிவைப் பெற முடியாது என்றனர். உலகம் தனது ஞானத்தால் தேவனை அறியமுடியவில்லை. ஒதுக்கப்பட்டு ஒரு மூலையிலிருந்த கூட்டம் யூதர்களை தவிர உலகம் முழுவதும் அறிவீனத்திலும் பாவத்திலும் மூழ்கிவிட்டது.

### பின்பு கிறிஸ்து என்ன செய்தார்?

அவர் பிதாவாகிய தேவனோடு நித்திய காலமாக அனுபவித்த மகிமையைவிட்டு உலகில் வந்து இரட்சிப்பை அருளினார். அதற்காக நமது தன்மையையுடைவராகப் பிறந்தார். தேவ சித்தத்தை முற்றிலும் நிறைவேற்றினார். தேவ கோபத்தை சிலுவையின் மூலம் சகித்தார். நமக்காக நித்தியமான நீதியை சம்பாதித்தார். உடைக்கப்பட்ட சட்டத்தின் சாபத்தி லிருந்து நம்மை மீட்டார். நமது பாவங்களுக்காகவும் அசுத்தங்களுக்காகவும் ஒரு ஊற்றைத் திறந்தார். நமது பாவங்களுக்காக அவர் மரித்தார். உயிரோடெழுந்து தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். சத்துரு முழுவதும் பாதபடியாக்கப்பட காத்திருக்கிறார். அவரிடம் வருவோருக்கு இரட்சிப்பை அருள, விசுவாசிக்கிறவர்களுக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

வரும் நாட்களில் பாவம் உலகிலிருந்து முற்றிலுமாக அகற்றப்படும். தீமை தண்டிக்கப்படாமல் விடப்படுவதில்லை. சாத்தான் தொடர்ந்து ஆளுகை செய்ய முடியாது. சிருஷ்டிகள் தவித்துக் கொண்டிருக்க முடியாது. ஒரு புதிய வானமும், புதிய பூமியும் தோன்ற வேண்டும். அங்கு நீதி வாசம் செய்ய வேண்டும். பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிரம்பவேண்டும் ரோமர் 8:22; அப்.3:21; 2 பேதுரு 3:13; ஏசா.11:9 ஆகிய வசனங்களைப் படிக்க.

### அப்போது கிறிஸ்து எங்கேயிருப்பார்? அவர் என்ன செய்வார்?

கிறிஸ்து நியாயாதிபதியாயிருப்பார். ".....நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்" யோவா.5:22 "அன்றியும் மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து......" மத்.25:31-32. "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" 2 கொரி.5:10.

தேவனுடைய நித்திய ஆலோசனையின்படி சிருஷ்டிப்பிலும், மீட்பிலும், சீர்பொருந்துதலிலும், நியாயத்தீர்ப்பிலும் கிறிஸ்துவே எல்லாமானவர்

(5-ம் பக்கம் பார்க்க)

**அறிவிப்பு**

**வருகையின் தூதன் ஊழியத்தை உதாரத்துவமாய் தாங்குங்கள்.**

**நிர்வாக வசதிக்காக**

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

(4-ம் பக்க தொடர்ச்சி)

யோவா.5:23. இது வீணாக எழுதப்பட வில்லை. "குமாரனை கனம் பண்ணாத வன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்"

**வேதபுத்தகத்தில் கிறிஸ்துவே எல்லாமாயிருக்கிறார்**

இரண்டு ஏற்பாடுகளிலும் தெளி வற்றதாக ஆரம்பத்திலும், அதைவிடத் தெளிவாக நடுவிலும், முழுமையாகக் கடைசியிலும் கிறிஸ்துவைக் காணலாம். ஆனால் உண்மையாகவும் முக்கியத்துவம் வாய்ந்தவராகவும் அனைத்துப் பகுதி களிலும் காணப்படுகிறார்.

பழைய ஏற்பாட்டின் பலிகளில் கிறிஸ்துவின் சிலுவை மரணம் விளங்குகிறது. ஒவ்வொரு மிருகமும் கொல்லப்பட்டு பலி செலுத்தப்பட்ட போது ஒரு இரட்சகர் வந்து நமது பாவங்களுக்காக மரிப்பார் என்பதும் அவர் நமது பாவங்களை நீக்க பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டி யாயிருப்பார் என்பதும் தெளிவாக்கப் பட்டது (1 பேதுரு 3:18).

காயீனைக் காட்டிலும் மேலான பலியைச் செலுத்தின ஆபேல் கிறிஸ்து வை நோக்கினான். ஆபேலின் இருதயம் காயீனின் இருதயத்தைவிட நன்றா யிருந்தது. அவன் தனது பலியைக் குறித்த அறிவையும் விசுவாசத்தையும் காணிக் கை மூலமாகக் காண்பித்தான். அவன் தனது மந்தையில் முதன்மையானவை களை அவற்றின் இரத்தத்தோடு செலுத்தி னான். ஏனெனில் இரத்தம் சிந்துதலில் லாமல் பாவ நிவிர்த்தி இல்லையே எபி.11:4.

ஜலப்பிரளயத்திற்கு முன்பாக ஜனங்களின் அக்கிரமம் பெருகியபோது ஏனோக்கு கிறிஸ்துவைக் குறித்துக் கூறிய தீர்க்கதரிசனம், "...... தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகள் எல்லாவற்றினிமித்தமும் அவர்களைக் கண்டிக்கிறதற்கும் ஆயிரமா யிரமான தமது பரிசுத்தவான்களோடுங் கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறி வித்தான்" யூதா.14-16.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் கூடாரங்களில் வாசம் பண்ணின ஆபிரகாம் கிறிஸ்துவைப் பார்த்தான். அவன் தனது வித்தில், தனது குடும்பத்தில் பூமியின் எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என நம்பி னான். விசுவாசத்தால் அவன் கிறிஸ்து வின் நாளைக் கண்டு சந்தோஷப் பட்டான் யோவா.8:56.

மரணத் தருவாயில் யாக்கோபு தனது குமாரருடன் கிறிஸ்துவைக் குறித்துப் பேசினான். எந்தக் கோத்திரத் தில் அவர் பிறப்பார் என்பதோடு ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் என்றும் தீர்க்கத்தரிசனமாக உரைத்தான். "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை. நியாயப் பிரமாணிக்கன் அவன் பாதங்களைவிட்டு ஒழிவதும் இல்லை, ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்" ஆதி.49:10.

மோசே மூலமாக தேவன் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த நியாயப்பிரமாணத்தின் சாராம்சமும் கிறிஸ்துவே. காலை, மாலை பலியிடுதல், தொடர்ந்து இரத்தம் சிந்துதல், பலி பீடம், இரக்க ஆசனம், பிரதான ஆசாரியன், பஸ்கா, பாவ நிவாரண நாள், போக்காடு ஆகியவை கிறிஸ்துவின் வாழ்வின் மாதிரி, அவரது பணி ஆகிய வற்றை காண்பிக்கின்றன. தேவன் தனது ஜனங்களின் பலவீனங்களைக் குறித்து மனதுருக்கம் உடையவராயிருந்தார்.

வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக அனுதினமும் செய்யப்பட்ட அதிசயங்கள் கிறிஸ்து வுக்கு நேராக அவர்களது கவனத்தை திருப்புவதற்கு ஏதுவாயிருந்தன. அவர் களை நடத்திய மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும், அவர்களை போஷித்த மன்னாவும், அடிக்கப்பட்ட பாறையிலிருந்து வெளியேறிய தண்ணீ ரும் கிறிஸ்துவையே காண்பிக்கின்றன. கொள்ளிவாய் சர்ப்பங்கள் கடித்த போது உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பமும் கிறிஸ்துவின் அடையாளமே (1கொரி. 10:4, யோவா.3:14).

நியாயாதிபதிகளும் கிறிஸ்து வையே சுட்டிக் காண்பிக்கின்றனர். இஸ்ரவேல் ஜனங்களை சிறையிலிருப் பிலிருந்து திருப்ப தேவன் எழுப்பிய யோசுவா, கிதியோன், யோசபாத், சிம்சோன் போன்ற அனைவரும் கிறிஸ்துவின் அடையாளங்கள்தான். எல்லாவற்றிற்கும் மேலான விடுதலை யாளரான வரப்போகிற கிறிஸ்துவை இவர்கள் காண்பித்தனர்.

தாவீது ராஜாவும் சிறந்த ஒரு அடையாளம். யாரும் கனம் பண்ணாத ஒரு சூழலில் அபிஷேகிக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்டான். சவுல் மூலமாகவும் கோத்திரங்கள் மூலமாகவும் துன்புறுத்தப்பட்டு ஜீவனுக்காகத் தப்பி ஓட வேண்டியதாயிருந்தது. பல துக்கங்களை அனுபவித்த அவன் இறுதியில் வெற்றியடைவது கிறிஸ்துவை பிரதிபலிப்பதாகும்.

ஏசாயா முதல் மல்கியா வரை யிலான தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவைக் குறித்துக் குறிப்பிட்டனர். அவர்கள் சில வேளைகளில் அவருடைய பாடுகளைக் குறித்தும் சில வேளைகளில் வரப்போகும் மகிமையைக் குறித்தும் கூறியுள்ளனர் (1 பேது.1:11) ஒரு தீபத்திற்குப் பின்னால் வைக்கப்பட்ட இன்னொரு தீபம் போல கிறிஸ்துவின் வருகைகள் ஒரே வேளை யில் அறிவிக்கப்பட்டன. தூய ஆவியி னால் ஏவப்பட்டு சில வேளைகளில் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைக் குறித்தும் இன்னும் சில வேளைகளில் கிறிஸ்துவின் அரசைக் குறித்தும் கூறி யுள்ளனர். அவரது மரணமும், அரசும் அவர் கள் மனதில் ஆழமாகக் காணப்பட்டது.

புதிய ஏற்பாடு முழுவதும் கிறிஸ்துவே நிரம்பியிருக்கிறார். சுவி சேஷங்களில் கிறிஸ்து வாழுவதையும், பேசுவதையும் மக்கள் மத்தியில் உலாவு வதையும் காண்கிறோம். அப்போஸ்தலர் களின் நடபடிகளில் கிறிஸ்து பிரசங்கி க்கப்படுவதையும் அறிவிக்கப்படுவதை யும் பிரஸ்தாபிக்கப் படுவதையும் காணலாம். நிருபங்களில் கிறிஸ்து எழுதப்பட்டு விவரிக்கப்பட்டு உயர்த்தப்படுகிறார்.

**உத்தம கிறிஸ்தவர்களின் மார்க்கங்களிலெல்லாம் கிறிஸ்துவே எல்லாமானவர்**

திருத்துவத்தின் மூன்று நபர் களும் ஒரேவிதமாக செயல்பட்டு மக்களைப் பாவத்திலிருந்தும், நரகத்தி லிருந்தும் விடுவிக்கின்றனர். ஆயினும் இத்திரித்துவத்தில் கிறிஸ்து விசேஷித்த விதமாக ஆத்தும இரட்சிப்பின் விஷயத்தில் உயர்த்தப்பட்டிருக்கிறார். கிறிஸ்து, 'வார்த்தையாக' பாவிகளுக்கு தேவ அன்பினால் வெளிப்படுத்தப் பட்டார். கிறிஸ்துவின் பிறப்பு, சிலுவை மரணம் ஆகியவை இரட்சிப்பின் மூலைக்கல்லாக அமைகின்றன. கிறிஸ்துவே வழியாக தேவனிடம் நம்மை நடத்து கிறார். கிறிஸ்து என்னும் அடிமரத்தோடு தான் அனைத்து பாவிகளும் ஒட்டப்பட வேண்டும். தேவனும் மனிதனும் சந்திக்கும் இடமாகவும், தேவனுக்கும் மனிதனுக்குமிடையிலும், பரத்துக்கும் பூமிக்கும் நடுவாகவும், திரித்துவருக்கும் ஏழைப் பாவிகளாகிய ஆதாமின் பிள்ளைகளுக்கும் மத்தியிலும் அவர் இருக்கிறார்.

யோவா.6:27-ன் படி கிறிஸ்துவை பிதாவாகிய தேவன் மரித்த உலகுக்கு ஜீவனளிக்க முத்திரித்து நியமித்திருக் கிறார். பிதாவானவர் கிறிஸ்துவுக்கு ஜனங்களை கொண்டு வந்திருப்பதின் நோக்கம் அவரை மகிமைப்படுத்துவ தாகும். ஆவியானவர் கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுப்பதோடு, ஆத்துமாக்கள் மன்னிப்படையவும் சமாதானம் பெறவும் எப்போதும் வழிநடத்துகிறார். கொலோ.1:19-ன் படி 'சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கிறது' ஆகாய மண்டலத் தில் சூரியன் இருப்பது போல உண்மைக் கிறிஸ்தவத்தில் கிறிஸ்து இருக்கிறார்.

**தேவனுக்கு முன்பாக ஒரு பாவியை நீதிமானாக நிறுத்த கிறிஸ்து எல்லாமாயிருக்கிறார்**

கிறிஸ்து மூலமாகவே தூய தேவனோடு நாம் சமாதானம் பண்ண முடியும். அவர் மூலமாகவே நாம் உன்னதமானவரின் சமூகத்தில் பயமின்றி நிற்க முடியும். "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" எபே.3:12. "..... தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்கு கிறவருமாய்....." ரோமர்.3:25.

"கிறிஸ்து தேவனற்றவர்களுக்காக சிலுவையில் மரித்தார், நான் அவரில் விசுவாசம் வைக்கிறேன்" என்ற ஒரே அடிப்படையில் அவர் முன்னாகக் கெஞ்ச வேண்டும். நமது மூத்த சகோதர

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

னாகிய கிறிஸ்துவின் நீதியாகிய அங்கி, பரலோகத்தின் ஒளிக்கு முன்பாக வெட்கமின்றி நாம் நிற்க ஏதுவாயிருக்கும்.

இயேசுவின் நாமம் ஒன்றே நித்திய மகிமையின் வாசலுக்குள் பிரவேசிக்க உதவுகிறது. நமது நாமங்களில் வந்து வாசலைத் தட்டுவதால் பயனில்லை.இயேசுவின் நாமம் நமக்கு நுழைவுச் சீட்டும் ஷிபோலேத்துமாயிருப்பதால் உள்ளே பிரவேசித்து வாழ முடியும்.

அழிவிலிருந்து நம்மைக் காக்க கிறிஸ்துவின் இரத்தம் ஒன்றே அடையாளம். கடைசி நாளில் தேவதூதர்கள் ஆதாமின் பிள்ளைகளைப் பிரித்து சேர்க்கும் போது இது ஒன்றே அடையாளம்.

நாம் நீதிமான்களாக்கப்படுவதற்குக் கிறிஸ்துவே காரணம் என்பதை மறக்கவேண்டாம். நாம் இலவச கிருபையினால் எளிய விசுவாசிகளாக பரலோகத்தில் பிரவேசிக்க முயற்சிப்போம்.

இந்த செய்தியை வாசிக்கிற எவரேனும் வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறீர்களா? யாரேனும் கொடிய பாவியாயிருந்து இரட்சிப்பைப் பெற வாஞ்சிக்கிறீர்களா? "கிறிஸ்துவிடம் வாருங்கள், அவர் உங்களை இரட்சிப்பார். உங்கள் ஆத்துமாவின் பாரங்களையெல்லாம் அவர் மீது வைத்து விடுங்கள். பயம் வேண்டாம் விசுவாசம் மட்டும் போதும்".

தேவ கோபத்திற்கு பயமா? கிறிஸ்து விடுவிப்பார். பிரமாணத்தை மீறினபடியால் சாபம் என்ற உணர்வா? அதிக தூரம் சென்றுவிட்டீர்களா? தேவனோடு ஒப்புரவாக்க கிறிஸ்து பாடுபட்டார். அசுத்தமாயிருக்கிறீர்கள் என்ற உணர்வா? கிறிஸ்துவின் இரத்தம் உங்களை சுத்திகரிக்கும். அரைகுறை வாழ்வா? கிறிஸ்துவில் நீங்கள் பரிபூரணமடையலாம். நீங்கள் ஒன்றுமற்றவர்கள் என்ற எண்ணமா? கிறிஸ்து எல்லாவற்றிலும் எல்லாமானவர். நாம் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் கழுவப்பட்டு வெண்மையாவதே போதும் வெளி.7:14.

## நீதிமானாக்கப்படுவதில் மட்டுமல்ல, உத்தம கிறிஸ்தவன் சுத்திகரிக்கப்படுவதிலும் கிறிஸ்து எல்லாமானவர்

கிறிஸ்துவிடம் வந்து அவரோடு ஐக்கியப்படுகிறதன் மூலமாகவே நாம் தூய்மையடைய முடியும். "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" (யோவா.15:5)

கிறிஸ்துவில் நிலைத்திராவிட்டால் ஒருவரும் தூய்மையில் வளர முடியாது. முன்னேறிச் செல்ல விசுவாசி கிறிஸ்துவாகிய ஆணி வேரிலிருந்து உறுதியைப் பெற வேண்டும். ஆவியானவர் ஈவாகவும் தமது ஜனங்களுக்கு கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட ஈவாகவும் இருக்கிறார். விசுவாசி இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதோடு அவரோடு நடந்து அவரில் வேரூன்றி வளரவேண்டும் (கொலோ.2:6-7)

தூய்மையாய் வாழ கிறிஸ்துவாகிய மன்னாவை அனுதினமும் உட்கொள்ள வேண்டும். கிறிஸ்துவாகிய கன்மலையின் ஜீவநீரை அனுதினமும் பருக வேண்டும். அன்றாடம் சிலுவை நாதரை நோக்கிப் பார்த்து அவரோடு நடக்கப் பழக வேண்டும். அவரைப் பார்த்து அவரையே போலாக வேண்டும். அவரைப் பார்ப்பதால் உங்கள் முகம் பிரகாசிக்க வேண்டும். உங்களைப் பாராமல் அவரையே பார்ப்பதால் பாவம் உங்களிடமிருந்து விலகுவதையும் உங்கள் கண்கள் பிரகாசமடைவதையும் காணமுடியும் (எபி.12:2; 2கொரி.3:18)

வனாந்தரத்திலிருந்து வெளியே வருவதற்கான இரகசியம் 'நேசரின் மேல் சாய்ந்து கொள்வதே' (உன்.8:5) பெலன் பெறுவதற்கான வழி நமது பெலவீனத்தை உணர்ந்து, கிறிஸ்துவே எல்லாம் என்பதாகும். கிருபையில் வளர கிறிஸ்துவின் ஊற்றை ஒவ்வொரு நிமிடமும் பயன்படுத்த வேண்டும். கலாத்தியர் 2:20-ன் அனுபவம் நமக்குப் பவுலைப் போல சொந்தமாக வேண்டும்.

கிறிஸ்து இல்லாமல் பரிசுத்த வாழ்வு இல்லை. பணத்தைப் பொத்தலான பையிலிடுவது போன்ற அனுபவம் இது. எனவே முதலாவது கிறிஸ்துவிடம் வரவேண்டும். அவர் உங்களை சுத்திகரிப்பார். பவுலோடு சேர்ந்து, "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலி.4:13 என்று சொல்வோமா?

## சுத்திகரிப்பில் மட்டுமின்றி நிகழ்கால நிகழ்வுகளிலும் கிறிஸ்து எல்லாமானவர்

இயேசு நமது துன்பகாலத்திற்கு உதவியாகப் பிறந்த சகோதரன். ஒரு சகோதரனைவிட நெருக்கமான சினேகிதனைப் போன்றவர். அவர் ஒருவரே தமது ஜனத்தை ஆறுதல்படுத்தக் கூடியவர். அவர் பாடுபட்டபடியால் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறவர். அவர் துக்கமுடையவராயிருந்து நமது துக்கங்களை அறிகிறவர். அவரது உடல் வேதனைப்படுத்தப்பட்டபடியால் சரீர வேதனைகளை அறிந்திருக்கிறார். அவர், 'என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது' சங்.22:14 என்று கதறினார். அவர் ஏழ்மை, களைப்பு ஆகியவற்றை அறிந்தவர். அடிக்கடி அவர் களைப்படைந்தார். அவருக்குத் தலை சாய்க்க இடமில்லாதிருந்தது. குடும்பத்தின் அன்பில்லா நிலைகளை அவர் அறிந்திருந்தார். ஏனெனில் அவருடைய சகோதரர்களும் அவரை நம்பவில்லை. சொந்த இல்லத்தில் அவருக்கு மதிப்பு இல்லாமலிருந்தது.

துன்பமுற்ற மக்களை ஆறுதல்படுத்த அவர் அறிந்திருந்தார். ஆவியில் காயமடைந்தவர்களுக்கு காயங்களில் எண்ணெயும், திராட்ச ரசமும் ஊற்ற அவர் அறிவார். வெறுமையான இருதயங்களை நிரப்பவும், களைத்துப் போனவர்களிடம் ஒரு வார்த்தை மூலம் பேசவும் இருதயம் நொறுங்குண்டவர்களை சுகமாக்கவும் நாம் சோர்ந்து போகும்போது 'பயப்பட வேண்டாம், நானே உன் இரட்சிப்பு' என்று சொல்லுகிறவரும் கிறிஸ்துவே.

தாவீது ஒருமுறை 'என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில் உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது' என்றார் சங்.94:19. "கர்த்தர் தாமே நமது பக்கத்திலிராவிட்டால் ..... கொந்தளிக்கும் ஜலங்கள் நமது ஆத்துமாவின் மேல் புரண்டு போயிருக்கும்" சங்.124:2,5 என்று சொல்ல முடியுமா? கிறிஸ்து இக்காலத்தில் உத்தம கிறிஸ்தவனின் வாழ்வில் ஆறுதலாயிருப்பது போல வரப்போகும் காலங்களிலும் அவர் அனைத்து நம்பிக்கையுமாயிருப்பார்.

ஒரு கிறிஸ்தவனின் உண்மையான நம்பிக்கை என்ன? இயேசுக் கிறிஸ்து மறுபடியும் வருகிறார். பாவமில்லாதவராகவும், பரிசுத்தவான்களோடும் நமது கண்ணீர்களைத் துடைக்கவும் மரித்த பரிசுத்தவான்களை உயிரோடெழுப்பவும் அவரோடு என்றும் சேர்ந்து வாழவைக்கவும் வருகிறார்.

'வருகிறவர் சீக்கிரமாய் வருவார், தாமதம் பண்ணார்' எபி.10:37. அவர் வருவது நமக்குப் போதுமானது.

## பரலோகத்திலும் கிறிஸ்துவே எல்லாம்

அனைத்து ஜனங்களும் பரத்தில் கிறிஸ்துவே எல்லாமானவர் என்பதைக் கண்டுகொள்வார்கள்.

சிங்காசனத்தின் மத்தியில், தூதர்கள் மற்றும் பரிசுத்தவான்களின் நடுவில் 'அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்' இருப்பார். 'அவரே விளக்காயிருப்பார்' வெளி.5:6-14; 21:23.

பரலோகவாசிகள் அவரை ஓயாமல் துதிப்பார்கள். 'அவர்கள் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் ஆசீர்வாதத்திற்கும், கனத்திற்கும், மகிமைக்கும், வல்லமைக்கும் பாத்திரர் என்று அதிக சத்தத்தோடு பாடுவார்கள்.

பரலோகவாசிகள் ஆண்டவராகிய இயேசுவுக்குப் பணிவிடை செய்வார்கள் வெளி.7:15.

கிறிஸ்துவின் பிரசன்னம் அவர்களது சந்தோஷம். அவரது முகத்தைப் பார்ப்பதும், அவரது பேச்சைக் கேட்பதும் மகிழ்ச்சியின் அனுபவம். அவரது பிரசன்னம் அனைத்துத் தேவைகளுக்கும் போதுமானது சங்.17:15.

நாம் அனைவரும் கிறிஸ்துவே எல்லாம் என்று நம்புகிறோமா? இந்த வாய்ப்பைப் பெறாதவர்கள் அனேகர். கிறிஸ்து தனது ஜனத்தை நேசித்து அவரையே சார்ந்து நாம் அவரில் நிலைத்திருக்க விரும்புகிறார். நாம் கிறிஸ்துவிலே வாழுவோம். அவரோடு வாழுவோம், அவருக்காக வாழுவோம். கிறிஸ்துவே எல்லாம் என்ற முழு உணர்வோடு வாழுவோம்.

**கிறிஸ்து இல்லாமல் பரிசுத்த வாழ்வு இல்லை. பணத்தைப் பொத்தலான பையிலிடுவது போன்ற அனுபவம் இது.**

# "ஆங்கிள்சீயின் பிரசங்கியான ஒற்றைக் கண்ணையுடைய" கிறிஸ்மஸ் ஈவான்ஸ்

***Christmas Evans : "The one - eyed preacher of Anglesea"***

James Gil Christ Lawson

கிறிஸ்மஸ் ஈவான்ஸுக்கு வேல்ஸ் நாட்டின் ஜான் பனியன் என்ற பெயரும் உண்டு. இவர் 1766-ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தில் பிறந்தார். அவரது பெற்றோர் மிக ஏழைகள். தமது 9-வது வயதில் தந்தையை இழந்த அவர் 6 ஆண்டுகள் ஒரு கொடூரமான சிற்றப்பனுக்கு கடின வேலை செய்தார். அவர் படிக்க முடியவில்லை. எனவே 17-ம் வயதில் எழுத்துக்களை வாசிக்க முடியாதவராயிருந்தார்.

அவருடைய வாழ்வு விபத்துக்களும், கடின அனுபவங்களும் நிறைந்ததாயிருந்தது. ஒரு முறை ஒரு சண்டையில் அவர் குத்தப்பட்டார். இன்னொரு முறை தண்ணீரில் ஏறக்குறைய மூழ்கிவிட்டார். ஒருமுறை கையில் உருவின ஒரு கத்தியோடு ஒரு உயர்ந்த மரத்திலிருந்து கீழே விழுந்தார். மேலும் ஒரு முறை அவர் ஏறியிருந்த குதிரை ஒரு தாழ்ந்த ஒடுங்கிய பாதை வழியாக முட்டி மோதி வேகமாகச் சென்றது. அவர் மனந்திரும்பிய பின்பு தேவனற்ற சில தோழர்கள் இரவில் கடத்திச்சென்று இரக்கமின்றி அடித்ததின் விளைவாக ஒரு கண்ணை இழந்தார். ஆனாலும் இந்த எல்லா சோதனைகளிலும் தேவன் இரக்கமாக அவரைப் பாதுகாத்தார்.

17-வது வயதில் தன் கொடூர எஜமானை விட்டு அவர் வெளியேறினார். விரைவில் ஒரு எழுப்புதல் கூடுகையில் கலந்து கொண்டு சபை அங்கமானார். இளமையிலே பல மார்க்க அழுத்தங்கள் அவரில் ஏற்பட்டாலும் தமது 17-வது வயதில்தான் கிறிஸ்துவுக்காக வாழத் தீர்மானித்தார். இப்போது எழுத வாசிக்கக் கற்று மனதை விருத்தி பண்ணினார்.

இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்த ஒரு சொப்பனத்தைக் கண்டு, ஊழியத்திற்கான அழைப்பினைப் பெற்றார். ஆரம்பத்தில் பிரசங்கித்தபோது தனது வாழ்வு ஒரு பாவம் நிறைந்த மூட்டை என உணர்ந்தார். பிறருடைய ஜெபங்களையும், பிரசங்கங்களையும் மனப்பாடம் செய்து ஜெபிக்கவும் பிரசங்கிக்கவும் ஆரம்பித்தார்.

1790-ம் ஆண்டில் அவர் அபிஷேகிக்கப்பட்டு எளிய சபைகளில் இளம் மிஷனெறியாக அமர்த்தப்பட்டார். அவர் மூலம் மக்கள் தேவனிடம் வருவதைக் கண்டு முதலில் ஆச்சரியமடைந்தார். ஆண்டவர் அவரையும் அவரது கூடுகைகளையும் ஆசீர்வதித்து அனேக மக்களை மந்தையில் சேர்த்தார். தென் வேல்ஸ் முழுவதும் கால்நடையாய்ப் பிரயாணம் பண்ணினார். சில வேளைகளில் ஞாயிற்றுக்கிழமைகளில் 5 முறை பிரசங்கித்ததுமுண்டு. அவர் ஆடை அணிந்த விதம் அழகாயிருக்கவில்லை. ஆனால் மக்கள் கூட்டம் கூட்டமாக அவரது செய்தியினைக் கேட்க வந்தனர். அவர்கள் கண்ணீரோடும் புலம்பலோடும் கடந்து சென்றனர்.

தமது 26-வது வயதில் அவர் ஆங்கிள்சீ எனப்பட்ட தீவின் சபைகளில் பிரசங்கிக்க ஆரம்பித்தார். இங்கு அனேக சபைகள் தவறான உபதேசத்திற்கு அடித்துச் செல்லப்பட்டிருந்தன. அதற்குத் தலைவராயிருந்தவர் மிகபுத்திமானும் மற்றும் கலாச்சார பேச்சாளருமான ஒருவராயிருந்தார். கிறிஸ்மஸ் ஈவான்ஸ் பல வருடங்கள் அவருக்கு எதிராகப் பிரயாசத்துடன் பிரசங்கித்து அவரது போதனைகளை எதிர்த்தார்.

### தேவனோடு நெருங்கிய உறவினை நாடினார்

இந்த எதிர்ப்பு, ஜெப ஆவியின் இனிமை கிறிஸ்தவ வாழ்விற்கு இன்றியமையாதது என்ற உணர்வுக்கு அவரைக் கொண்டு வந்தது. தேவனோடு இன்னும் நெருங்கிய உறவு வேண்டும் என்ற வாஞ்சையும் ஏற்பட்டது. அந்தப் பூரணமான கிறிஸ்தவ அனுபவத்தை அவர் பெற்றதைக் குறித்து இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"நான் மிகவும் சோர்ந்து போனவனாகவும், கிறிஸ்துவின் பாவநிவாரண பலியைக் குறித்தும் அவரது ஆவியைக் குறித்தும் குளிர்ந்த எண்ணமுடையவனாகவுமிருந்தேன். பீடத்தில் நிற்கும் போதும் தனி ஜெபத்திலும், வேதவசனத்தை வாசிப்பதிலும் குளிர்ந்த நிலை காணப்பட்டது. 15 ஆண்டுகளுக்கு முன்பாக என் இருதயம் இயேசுவோடு எம்மாவூருக்குச் சென்ற சீஷரைப் போல் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்ததை எண்ணிப்பார்த்தேன். ஆனால் மறக்க முடியாத ஒரு நாள் வந்தது.

நான் டார்ஜெஸ்லி என்ற இடத்திலிருந்து மாக்கின்லெத் என்ற இடத்திற்குப் பிரயாணம் பண்ணி காடெய்ற் இட்லிஸுக்கு நேராக ஏறிக்கொண்டிருந்தேன். அப்போது எனது கட்டுகள் விழுந்து போவது போலவும், மலைகளின் பனி என்னில் உருகிப்பாய்வது போலவும் உணர்ந்தேன். தூய ஆவியானவரின் வாக்கில் உறுதி பெற்றேன். எனது முழு ஆவியும் மிகப்பெரிய கட்டிலிருந்து விடுபடுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. கண்ணீர் கட்டுக்கடங்காமல் வெளியேற நான் சத்தமிட்டு தேவனுடைய சந்திப்புக்காக ஜெபித்தேன். இரட்சிப்பின் சந்தோஷத்தையும், அங்கிள்ஸீ சபை மக்கள் சந்திக்கப்படும்படியாகவும் ஜெபித்தேன்"

எனது பராமரிப்பில் அடங்கியிருந்த அனைத்து சபைகளுக்காவும், வேல்ஸ் நாட்டின் பெரும்பாலான பிரசங்கிமாருக்காகவும் பெயர் பெயராக ஜெபித்தேன். இவ்வாறு 3 மணி நேரம் கடந்தது. அழுது புலம்பி என் சரீரம் பெலவீனமடைவது வரை கடல் அலை போல ஒன்றன் பின் ஒன்றாக எண்ணங்கள் வந்து கொண்டிருந்தன. இவ்வாறு என்னையும் எனது சரீரம், ஆத்துமா, தாலந்துகள், உழைப்புகள், வாழ்வு, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு மணி நேரம் எனக்கு மீந்திருந்த யாவையும் எனது கவலைகளையும் கிறிஸ்துவின் கரங்களில் ஒப்படைத்துவிட்டேன்.

ரஸ்தா மலைப்பாங்கானதாகவும் தனிமையானதாகவுமிருந்தது. தேவனோடு போராட எந்தத் தடையுமிருக்கவில்லை. இந்த சம்பவம் தேவனுடைய நற்குணத்தைப் பற்றிய புதிய வெளிப்படுத்துதலை எனக்கும், சபைக்கும் அளித்தது. இவ்வாறு தீய போதனைகளிலிருந்து நானும் ஆங்கிள்சியா சபையாரும் தப்புவிக்கப்பட்டோம். முன்பு என்னில் காணப்பட்ட பாவிகளின் மனந்திரும்புதலுக்கான வாஞ்சை, போராட்ட ஜெபம் ஆகியவை மறுபடியும் வாழ்வில் திரும்பி வந்தன. தேவ வார்த்தையைப் பற்றிக் கொண்டேன்.

அதன் விளைவாக நான் வீடு திரும்பியபோது ஆங்கிள்சியா மக்களிலும் ஜெப ஆவி கிரியை செய்வதைக் கண்டேன். குறிப்பாக மூப்பர்கள், தேவன் இரக்கமாக மக்களை சந்திக்க வேண்டுமெனவும் பாவிகள் மனந்திரும்ப தேவ கிருபை வெளிப்பட வேண்டுமெனவும் ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

இந்த சூழலில் **கிறிஸ்மஸ் ஈவான்ஸ்** ஒரு '**உத்தம உடன்படிக்கையை தேவனோடு**' என்ற நூலை எழுதினார். ஒவ்வொரு தலைப்பின் கீழும் அவர் கையொப்பம் இட்டார். ஒரு நூலில், தேவன் மேலும் மனிதரிடத்திலும் '**அன்பினால் நோய்ப்பட்ட இருதயத்தை எனக்குத் தாரும்**' என்று எழுதினார். நான் பிரசங்கிக்கு முன்னே உமது வசனத்தின் வல்லமையை நான் உணரட்டும். மோசே தரையிலும் தண்ணீரிலும் அற்புதங்களைச் செய்யு முன் தனது கையிலிருந்த கோலின் வல்லமையை அறிந்து கொண்டானல்லவா! இயேசுக் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலம் இதை தாரும் என்று எழுதியிருக்கிறார்.

இவ்வாறு தன்னை முழுவதுமாக தேவனுக்காக அர்ப்பணித்து பின்பு தூய ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்ற பின்பு புதிய அபிஷேகத்தோடும் வல்லமையோடும் அவர் பிரசங்கிக்க ஆரம்பித்தார். ஆங்கிள்சியா மற்றும் வேல்ஸ் முழுவதும் எழுப்புதல் பரவியது. அவர் '**அன்பான வயது முதிர்ந்த கிறிஸ்மஸ்**' என்று சாதாரணமாக அழைக்கப்பட்டார். தனது முதிர்ந்த வயதில் ஜூலை 23, 1838-ல் வெற்றியின் பாடலோடு சந்தோஷமாக இவ்வுலக ஓட்டத்தை முடித்தார்.

**அவர் ஆடை அணிந்த விதம் அழகாயிருக்கவில்லை. ஆனால் மக்கள் கூட்டம் கூட்டமாக அவரது செய்தியினைக் கேட்க வந்தனர். அவர்கள் கண்ணீரோடும் புலம்பலோடும் கடந்து சென்றனர்.**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

**ஊழியத்திற்கு உதாரத்துவமாய் உதவுவது என்றால் என்ன?**

நீலகிரி மாவட்டத்திலிருந்து ஒரு சகோதரர் மாதந்தோறும் தூதன் ஊழியத்திற்கு ரூபாய் 20.00 மணியாடர் அனுப்புகிறார்.

தூதன் ஊழியங்களுக்காக நீங்கள் மாதந்தோறும் ரூபாய் **20/-**யை சேமிப்பீர்களானால் வருடத்திற்கு ரூபாய் 240/- அனுப்பலாம்.

தினந்தோறும் ரூபாய் **1.00** (ஒன்றே ஒன்று) சேமிப்பீர்களானால் வருடத்திற்கு ரூபாய் 360/- கொடுக்கலாம்.

வாரந்தோறும் ரூபாய் **10.00** சேமிப்பீர்களானால் வருடத்திற்கு ரூபாய் 500/- கொடுக்கலாம்.

மாதந்தோறும் தூதன் ஊழியங்களுக்கு ரூபாய் **50.00** மணியாடர் அனுப்பவோ, சேமிக்கவோ கூடுமானால் வருடத்திற்கு இந்த ஊழியங்களுக்கு நீங்கள் ரூபாய் 600/- கொடுக்கலாமே!

**உதாரத்துவமாய் உதவ எண்ணின ஒரு குடும்பத்தினரின் உருக்கமான கடிதம்**

From Chennai
D. John Samuel 26.12.18

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர் Wesley அவர்களுக்கு எழுதும் கடிதம். என்னுடைய பெயர் John Samuel. நான் சென்னையில் வசித்து வருகிறேன். என்னுடைய மனைவியின் பெயர் Parimala John alias Parimalam Sarah. என்னுடைய மகன் பெயர் Joseph Charles - CN 02660L. அவன் பெயருக்குத்தான் வருகையின் தூதன் பத்திரிகை வந்து கொண்டு இருக்கிறது.

என்னுடைய மனைவி Parimalam Sarah உங்களுடைய பத்திரிகையை அதிகம் நேசிப்பவள். ஊழியத்திற்கு அதிகமாக உதவி செய்ய வேண்டும் என்று ஆசைப்படுவாள். உங்களுடைய பத்திரிகை எங்களது குடும்பத்திற்கு எங்களுடைய திருமணத்திற்கு பிறகு (1963-ம் ஆண்டு முதல்) ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது. அதற்கு முன்னதாகவே அவள் பத்திரிகையை வாசித்துக் கொண்டு இருக்கிறாள். கடந்த ஆண்டு அல்லது அதற்கு முந்தின ஆண்டு அவள் தன்னுடைய முழு சாட்சியையும் உங்களுக்கு எழுதி காணிக்கையாக உபவாச ஜெப ஊழியத்திற்காக ரூ.5000/- அனுப்பி இருந்தாள். அந்த சாட்சியை நீங்கள் உங்களது பத்திரிகையிலும் பிரசுரித்திருந்தீர்கள்.

இப்பொழுதும் என்னுடைய மனைவி Parimalam Sarah கடந்த 24.11.2018 அன்று கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்துவிட்டாள். அவள் மரிப்பதற்கு முன்பு உங்கள் உபவாச ஊழியத்திற்காக ரூ.5000/- சேமித்து வைத்து அனுப்புமாறு சொன்னாள். அவளுடைய சுகவீனத்தினிமித்தம் பணம் அனுப்ப தாமதமாகிவிட்டது, மன்னிக்கவும். அவள் Stomach Cancer வியாதியால் பீடிக்கப்பட்டு கடந்த 8 மாத காலம் படுக்கையில் இருந்தாள். ஆஸ்பத்திரிக்கு சென்று மருந்து மாத்திரை ஒன்றும் எடுக்கவில்லை. 8 மாத காலமும் விசுவாசத்துடனும், நம்பிக்கையிலுமே இருந்து ஜெப ஜீவியத்துடன் கர்த்தருக்கு சித்தமான ஏற்ற வேளையில் தேவனுடைய ராஜ்யத்தில் போய் சுதந்தரித்துக் கொண்டாள். அவள் உங்கள் ஊழியத்திற்காக சேமித்து வைத்திருந்த அந்த ரூ.5000/-ஐ நாளைக்கு உங்கள் Bank Account மூலம் அனுப்பி வைக்கிறேன். பணம் கிடைத்ததும் தயவு செய்து எனக்கு தெரிவிக்கவும்.

மேலும் அவளுடைய அடக்க ஆராதனையும், Prayer Meeting-ம் மிகவும் மகிமையாக நடைபெற்றது. Prayer Meeting Programme Video-வாக எடுத்து You Tube-ல் upload செய்யப்பட்டுள்ளது. You Tube-ல் Parimalam Sarah என்று type செய்தால் பார்க்க முடியும். இது போக இன்று உங்களுடைய Whatsapp-ல் 94897 40295 என்ற நம்பருக்கும் அனுப்பி இருக்கிறேன். அவளுடைய சாட்சியை நீங்கள் பார்த்து கொள்ளலாம். என்னுடைய மனைவி சென்ற அதே ஜீவியத்தில் எங்கள் குடும்பத்தினர் யாவரும் பின்பற்றி அந்த பரம கானானை சுதந்தரித்துக் கொள்ள எங்களுக்காக ஜெபிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொண்டு இக்கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

கிறிஸ்துவுக்குள் தங்களன்புள்ள
John Samuel

**குறிப்பு:** அவள் சுகவீனமாக இருந்த அந்த 8 மாதமும் Cancer வியாதியினிமித்தமாக எந்தவித கஷ்டமும் இல்லாமல் கர்த்தர் கிருபையாக அவளை காத்துக்கொண்டார்.

* * *

**உதாரத்துவமாய் கொடுக்க வேண்டுமா? வேத புத்தகமாகிய தேவனுடைய புத்தகம் என்ன சொல்லுகிறது?**

அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் **தேவன் அளித்த கிருபையை** உங்களுக்கு அறிவிக்கிறோம்.

அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், **உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.**

மேலும் அவர்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் **திராணிக்கு மிஞ்சியும்** கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்.

தங்கள் உபகாரத்தையும் பரிசுத்தவான்களுக்கு செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக் கொண்டார்கள்.

மேலும் நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக் கொடுத்தார்கள் 2 கொரிந்தியர் 8:1-5.

தேவனுடைய பிள்ளையே, உனக்கு மிகுந்த உபத்திரவமா? உதாரத்துவமாய் கொடு; கொடிய தரித்திரமா? உதாரத்துவமாய் கொடு. **திராணிக்குத்தக்கதாகவும், திராணிக்கு மிஞ்சியும் கொடு.**

கொடுங்கள் என்று சொல்லி அதிகமாக எழுதிவிட்டேன். கொடுப்பதினால் ஏதாவது பிரயோஜனம் உண்டா என்றுதானே கேட்கிறீர்கள். இயேசப்பா சொன்ன மகிழ்ச்சியான **வார்த்தையை, வாக்குத்தத்தத்தை** எழுதி அடியேன் இந்த ஆசிரியர் கடிதத்தை முடிக்கிறேன்.

**கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்.** லூக். 6:38

தேவனுடைய பிள்ளையே!

**உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்** 2 கொரி.9:7

for God loveth a cheerful giver

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

ஆசிரியர் : 94980 30295
உதவி : 94897 40295
ஜெப உதவி : 89404 64531
அலுவலகம் : 95432 21008
காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)

**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

*Book Packets contains periodicals*

To

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008